RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING — மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 248 | செப்டம்பர்.9 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## பயங்கரவாத சதி வழக்கு: தமிழகம் முதல் ஜம்மு காஷ்மீர் வரை 22 இடங்களில் என்ஐஏ சோதனை




புதுடெல்லி, செப்.09-

பயங்கரவாத சதி வழக்கு தொடர்பாக தமிழகம் உட்பட ஐந்து மாநிலங்கள் மற்றும் ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசம் ஆகியவற்றில் 22 இடங்களில் தேசிய புலனாய்வு முகமை இன்று (திங்கள்கிழமை) சோதனை நடத்தி வருகிறது.

பயங்கரவாத சதி வழக்கு தொடர்பாக பிஹாரில் எட்டு இடங்களிலும், கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாட்டில் தலா ஒரு இடத்திலும், உத்தரப் பிரதேசத்தில் இரண்டு இடங்களிலும், ஜம்மு காஷ்மீரில் ஒன்பது இடங்களிலும் இன்று என்ஐஏ சோதனை நடத்தி வருகிறது.

பயங்கரவாத சதி தொடர்பான உளவுத்துறை தகவல்களின் அடிப்படையில் இந்த 22 இடங்களில் தனித்தனி என்ஐஏ குழுக்கள், இன்று ஒரே நேரத்தில் சோதனை நடவடிக்கையைத் தொடங்கின. தேச விரோத வலைப்பின்னலுடன் தொடர்பு வைத்திருப்பதாக சந்தேகிக்கப்படும் நபர்களின் வீடுகள் மற்றும் தொடர்புடைய இடங்களில் மாநில காவல்துறையுடன் இணைந்து என்ஐஏ அதிகாரிகள் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் பதிவு செய்யப்பட்ட RC-1/2025/ NIA/CHE என்ற வழக்கை என்ஐஏ விசாரித்து வருகிறது. இந்த விசாரணையில், நாட்டில் கலவரத்தை தூண்டி, சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் முயற்சிகளில் தேசவிரோத வலைப்பின்னல் ஈடுபட்டுள்ளதாக சந்தேகம் எழுந்தது.

இதனையடுத்து, சமீபத்திய மாதங்களில், பல்வேறு மாநிலங்களில் இதுகுறித்த விசாரணையை என்ஐஏ தீவிரப் படுத்தியுள்ளது. இதனையொட்டி நாடு தழுவிய நடவடிக்கைகள் மூலம் தடைசெய்யப்பட்ட அமைப்புகளுடன் தொடர்புடையதாக குற்றம்சாட்டி பலர் கைது செய்யப்பட்டனர்.



## குடியாத்தத்தில் தாழை சிலம்பம் பயிற்சி மற்றும் சுப்பிரமணி சிலம்பம் கலைக்குழு மாணவர்கள் உலக சாதனை

### பயிற்சி ஆசிரியர் எஸ்.சிவகுமார் மற்றும் பொதுமக்கள் பாராட்டு!

வேலூர், செப்.9-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, குடியாத்தம் அடுத்த தாழை சிலம்பம் பயிற்சி பள்ளி மற்றும் சுப்பிரமணி சிலம்பம் கலைக்குழு பயிற்சி பள்ளி மாணவ மாணவிகள், திருக்குறளை வாய்விட்டு சொல்லிக்கொண்டு சிலம்பம் சுற்றி, மாபெரும் உலக சாதனை படைத்துள்ளனர். தாழை சிலம்பம் பள்ளி மற்றும் சுப்பிரமணிய சிலம்பம் கலைக்குழு மாஸ்டர் எஸ்.சிவகுமார் தலைமையில் இந்த பயிற்சி வகுப்புகள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. இதில் 17 மாணவர்கள் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்று, உலக சாதனை படைத்துள்ளனர். இதுகுறித்து பொதுமக்கள், மாணவ மாணவிகள் பயிலும் பள்ளிகளின் ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலர் பாராட்டி வருகின்றனர்.

## 2026 ல் மு.க.ஸ்டாலின் தலைமையில் மீண்டும் திமுக ஆட்சிதான்

### முக்குலத்தோர் புலிப்படை தலைவர் கருணாஸ் உறுதி



சிவகங்கை செப்.9-

சிவகங்கை அருகே பனங்காடி கிராமத்தில் உள்ள அவருக்குச் சொந்தமான தோப்பில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் பேசுகையில் எடப்பாடி பழனிச்சாமி ஒருவர் போதும் ஒட்டுமொத்த அதிமுகவை அழிப்பதற்கு எனவும் பாசிச பாஜகவின் கைப்பாவையாய் , அரசியல் நாகரீகம் தெரியாத ஒரு நபராக பழனிச்சாமி இருக்கிறார்,

தனது சுயநலத்திற்காகவும் தனது சம்பந்தி சுயலாபத்திற்காகவுமே அதிமுகவை நடத்திக்கொண்டிருக்கிறார் எனவும் தெரிவித்தார்..

மேலும் அவர் பேசும்போது வருகின்ற சட்டமன்ற பொதுத்தேர்தலில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களது தலைமையிலான திமுக கூட்டணியே மாபெரும் வெற்றி பெறப்போகிறது எனவும் தெரிவித்தார்...

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் தமிழ்நாட்டில் எந்த தொகுதியில் நிற்கச் சொன்னாலும் நிற்கத் தயார் எனவும் பேசினார்...

பாஜக தனது வேலையை அதிமுக மீது காட்டுகாறது, அதற்கு ஏற்றார்போல பழனிச்சாமியும் செயல்படுகிறார் எனவும் கூறினார்...

தமிழ்நாட்டில் அரசியலுக்கு யார் வேண்டுமானாலும் வரலாம் போகலாம், அன்றைய காலகட்டத்தில் திரைத்துறையிலிருந்து முதன்முதலில் எஸ். எஸ். இராஜேந்திரன் தான் அரசியலுக்கு வந்தவர் எனவும் அப்படி வந்தவர்களில் டாக்டர் கலைஞர், எம்ஜிஆர், ஜெயலலிதா , விஜயகாந்த் இப்படி ஒருசிலர் மட்டுமே சோபித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்... ஆகவே நடிகர் விஜய் அவர்கள் அரசியலுக்கு வருவதை மக்கள் தான் முடிவு செய்வார்கள் எனவும் தெரிவித்தார்...

அப்போது முக்குலத்தோர் புலிப்படை மாநில செயலாளர் முத்துராமலிங்கம், மாநில இளைஞரணி பசும்பொன் சௌந்தர், இராமநாதபுரம் மேற்கு மாவட்ட செயலாளர் பசும்பொன் சுந்தர், கிழக்கு மாவட்ட செயலாளர் பசும்பொன் பாலாஜி , ஒன்றிய செயலாளர்கள் ஆகாஷ் சேதுபதி, அஜீத் சேதுபதி உடனிருந்தனர்...



## உலக அளவில் புகழ் பெற்ற வேலூர் கோட்டை அகழியில் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை சார்பில் ஒத்திகை நிகழ்ச்சி!!

வேலூர் செப்,10-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, உலக அளவில் புகழ்பெற்ற வேலூர் கோட்டை அகழியில் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை சார்பில் ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் ஒரு பகுதியாக நீர்நிலைகளில் மீட்பு பணிகள் மேற்கொள்வது குறித்த மாதிரி ஒத்திகை நிகழ்வில் பயன்படுத்தப்படும் மீட்பு உபகரணங்களையும், ஒத்திகைகளையும் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மீட்பு உபகரணங்களையும் ஒத்திகை நிகழ்ச்சியையும் பார்வையிட்டனர். இந்நிகழ்வின்போது மாவட்ட தீயணைப்பு அலுவலர் ராபின் கேஸ்ட்ரோ, மாவட்ட துணை தீயணைப்பு அலுவலர் பழனி, தீயணைப்பு நிலைய அலுவலர்கள் முருகேசன், பாலாஜி,

சரவணன், உதயசந்தர், வட்டாட்சியர் வடிவேல், வேலூர் வடக்கு காவல் ஆய்வாளர் சீனிவாசன், சிறப்பு விருந்தினராக பாரத் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி தாளாளரும், பாரத் கல்வி குழும தலைவரும், வேலூர் ரெட் கிராஸ் அமைப்பின் மாநில கிளை நிர்வாக குழுவிற்கு மாவட்ட பிரதிநிதியுமான முனைவர். சி.இந்திரநாத் மற்றும் பாரத் மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவ, மாணவிகள் ஆசிரியர்கள், தொல்லியல் துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு ஒத்திகை நிகழ்ச்சியை பார்வையிட்டனர்.

## சிவகங்கை காளையார் கோவிலில் ஏழு ஆண்டுகளாக ஓரே விலையில் சாதனை : பாரம்பரிய N.N.S.மட்டன் ஸ்டால்






சிவகங்கை, செப்.9

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் கடந்த 7 ஆண்டுகளுக்கு மேல் N.N.S.ஆட்டு இறைச்சி கடையினை நாகராஜன் என்பவர் நடத்தி வருகிறார் சிவகங்கை மாவட்டம் முழுவதும் ஆட்டிறைச்சியின் விலை 1 கிலோ 1000ரூ மற்றும் அதற்கு மேலும் அதற்க்கு குறைவாக 900ரூ இந்த விலைக்கு குறைந்து எங்குமே மட்டன் விற்கப்படுவதில்லை இவ்வாறு இருக்கும் சூழலில் சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் நாகராஜன் என்பவர் ஆரம்ப முதல் இன்று வரை ஒரு கிலோ ரூபாய் 600 க்கு விற்று சாதனை செய்து வருகிறார்.இவர் கூறியதாவது ஒரு ஆட்டு கறி விற்று எடுக்கும் லாபத்தை நான் 10 ஆடுகள் விற்று எடுக்கிறேன் எனக்கு அதிகப்படியான வாடிக்கையாளர்கள் உள்ளனர். அது மட்டுமல்லாது எங்களிடம் உடனுக்குடன் அறுத்த ஆடுகள் மட்டுமே சுத்தமாகவும் சுகாதாரமாகவும் விற்கப்படும். பழைய ஆட்டுக்கறிகள் என்றுமே விற்கப்பட மாட்டாது என்ற கொள்கையில் பிடிப்புடன் செயல்பட்டு வருகிறேன் நான் ஏழ்மையான குடும்பத்தில் வளர்ந்தவன் ஏழை எளிய மக்களும் ஆட்டு இறைச்சியை விலையை கண்டு வியக்கிறார்கள் ஒவ்வொரு கடைகளிலும் தீபாவளி பண்டிகை முன்னிட்டு ஆண்டுதோறும் விலையை ஏற்றிக்கொண்டே செல்கின்றனர் இந்நிலையில்ஏழு ஆண்டுகள் விலையில்எவ்விதமாற்றமின்றி ஓரே விலையில் மக்களுக்கு மருத்துவகுணம் வாய்ந்த ஆட்டிறைச்சியை வழங்கி பயன்பெற வேண்டும் என்பதற்காக மட்டுமே இந்த தொழிலை நடத்தி வருகிறேன். இல்லத்து விசேஷங்கள் சுபகாரியங்களுக்கும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்று வருகிறேன்.எல்லா நாட்களுமே எங்களின் கடை காலை 5 மணி முதல் 8 மணி வரை செயல்படும் குறிப்பாக ஞாயிற்றுக்கிழமை காலை 4 மணி முதல் மதியம் 12 மணி வரை இறைச்சி விற்கப்படுகிறது என்ற தகவலை வழங்கினார் இந்த இறைச்சி கடைக்கு வெளியூர்களில் இருந்து வாடிக்கையாளர் ஏராளமானோர் ஒரு கிலோ வாங்கும் இடத்தில் இரண்டு கிலோ வாங்கி செல்கிறோம் என்ற ஆனந்தத்துடன் செல்கிறார்கள் என்றும் கூறினார் கடந்த ஏழு ஆண்டுகளாக எங்களுக்கு ஆதரவு தரும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்ற மன நெகிழ்வோடு தெரிவித்தார் கடையின் உரிமையாளர் நாகராஜன். கடைக்கு செல்லும் வழி சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஜிஷீ தொண்டி செல்லும் நெடுஞ் சாலையில் 4 கால் மண்டபத்திற்கு அருகே அமைந்துள்ளது. தொடர்புக்கு எண்: 81100 32776 , 81100 32778

## தீபாவளி பண்டிகையை முன்னிட்டு விரைவு ரயில்களில் கூடுதல் பெட்டிகளை இணைக்க நடவடிக்கை

சென்னை, செப்.09-

தீபாவளி பண்டிகையை ஒட்டி, விரைவு ரயில்களில் ஓரிரு கூடுதல் பெட்டிகள் இணைத்து இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தாண்டு தீவாவளி பண்டிகை அக்.20ம் தேதி கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு, சென்னையில் இருந்து குறிப்பிட்ட நாட்களில் சொந்த ஊருக்கு செல்லும் ரயில்களில் டிக்கெட் முன்பதிவு முடிந்துவிட்டது.

இதையடுத்து, பயணிகள் நெரிசலை குறைக்க, சிறப்பு ரயில்களை இயக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், தீபாவளி பண்டிகையை ஒட்டி, விரைவு ரயில்களில் ஓரிரு கூடுதல் பெட்டிகள் இணைத்து இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து, தெற்கு ரயில்வே அதிகாரிகள் கூறியதாவது: இந்த ஆண்டும் தீபாவளி பண்டிகைகால ரயில்களில் டிக்கெட் முன்பதிவு சில நிமிடங்களில் முடிந்துவிட்டது. சிறப்பு ரயில்கள் அறிவிப்புக்காக பொதுமக்கள் காத்திருக்கின்றனர். எனவே, பயணிகள் தேவை மிக்க வழித்தடங்களில், தீபாவளி சிறப்பு ரயில்கள் இயக்கப்படும். விரைவு ரயில்களில் அதிகபட்சமாக 24 பெட்டிகள் வரை இணைத்து இயக்க முடியும். குறிப்பாக, கொல்லம், செங்கோட்டை, நாகர்கோவில், திருநெல்வேலி, கோவை, மதுரை உள்ளிட்ட நெரிசல் மிக்க வழித்தடங்களில் செல்லும் விரைவு ரயில்களில், ஓரிரு பெட்டிகள் கூடுதலாக இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இதனால், காத்திருப்போர் பட்டியலில் உள்ள பயணிகளுக்கு இடம் கிடைக்க வாய்ப்பு உள்ளது இவ்வாறு அவர்கள் கூறினர்.





# சிவகங்கையில் சந்திரகிரகணத்தை பார்வையிட தொலைநோக்கி ஏற்பாடு

சிவகங்கை, செப்.09-

சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி வரும்போது ஏற்படும் சந்திரகிரகணத்தை காண்பதற்காக சிவகங்கை பேருந்து நிலையம் சண்முகராஜா கலையரங்கம் அருகில் சிவகங்கை மாவட்ட தமிழ்நாடு அறிவியல் இயக்கம் பொதுமக்களும் மாணவர்களும் பார்வையிடுவதற்காக தொலைநோக்கியை ஏற்பாடு செய்திருந்தது. மேகக் கூட்டங்களுக்கு இடையில் வெளிவந்த சந்திரனை ஆர்வமுடன் பொதுமக்கள் தொலைநோக்கி மூலமாக கண்டு ரசித்தனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி தலைமையில் தொலைநோக்கிக்கான பயிற்சி பெற்ற ஆரோக்கியமேரி கிளைப் பொருளாளர் ராஜாசரவணன் கிளைத் தலைவர் மணவாளன் வானவில் மன்ற கருத்தாளர் லலிதா செயற்குழு உறுப்பினர் செல்வம் காளிராசா சிறப்பான ஏற்பாட்டை செய்திருந்தனர். மக்கள் ஆங்காங்கே தங்களுடைய வீடுகளில் மிகுந்த எதிர்பார்ப்புடன் செப்டம்பர் 7ஆம் தேதி இரவு 9:30 மணியிலிருந்து 1:00 மணி வரை சந்திரகிரகணத்தை பார்க்கும் ஆர்வத்தோடு விழித்திருந்து முயற்சி செய்தனர். சந்திர கிரகணம் ஏற்படக்கூடிய நேரத்தில் சிவகங்கை மாவட்டத்தினுடைய பல்வேறு இடங்களில் மேக மறைப்பின் காரணமாக மக்கள் நேரடியாக காண இயலாதநிலை ஏற்பட்டது. இருந்தபோதிலும் மாவட்டத்தினுடைய ஒரு சில இடங்களில் நேரடியாக முழு சந்திரகிரகணத்தை பார்க்கக் கூடிய வாய்ப்பு சிலருக்கு கிடைத்தது. பலரும் பார்க்க இயலாமல் ஏமாற்றம் அடைந்தனர். இருந்தாலும் மாவட்டம் முழுவதும் சந்திரகிரகணத்தை செயலி மூலம் காண்பதற்கு முகநூல் தளத்தில் பகிரப்பட்டது. சிவகங்கை மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் உள்ள அரசு பள்ளிகளில் முழு சந்திரகிரகணம் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரங்களும் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டு ரத்த நிலவை கண்டுகளிப்பதற்கான ஏற்பாடுகளை வானவில் மன்ற கருத்தாளர்களைக் கொண்டு தமிழ்நாடு அறிவியல இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது. அடுத்து வருகின்ற 2028 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் தேதி தான் இந்த மாதிரியான சந்திரகிரகணத்தை பார்க்க இயலும்.



# காட்பாடியில் சோபுகை கராத்தே அகாடமி திறப்பு விழா: வேலூர் மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார் பங்கேற்பு

வேலூர், செப்.09-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, காந்திநகர், பாரதி நகர் விரிவு அருகே, சோபுகை கராத்தே அகாடமி திறப்பு விழா, வேலூர் டிஸ்ட்ரிக்ட் ஸ்போர்ட்ஸ் கராத்தே அசோசியேஷன் நிறுவனத் தலைவர் எம். ஷேக் அப்துல்லா தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக காட்பாடி தெற்கு பகுதி திமுக செயலாளரும், வேலூர் மாநகராட்சி துணை மேயருமான எம்.சுனில்குமார் கலந்துகொண்டு ரிப்பன் வெட்டி, குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தனர். இதனைத் தொடர்ந்து இணைப்புகள் வழங்கப்பட்டது. இந்த கராத்தே பயிற்சி நிறுவனத்தில் பல்வேறு சாதனைகள் படைத்து விருதுகள், கோப்பைகள் மற்றும் பதக்கங்களை வென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சியில் திரளான கராத்தே பயிற்சி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.





■ சிவகங்கை மாவட்டம் இளையான்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கம்,தமிழ் நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் 100 நாள் வேலை முழுமையாக வழங்க வேண்டும், ஒன்றிய அரசு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும், இதற்கான நிதியை வேறு மாற்றுப்பணிகளுக்கு மடைமாற்றம் செய்யக்கூடாது, ஒதுக்கப்பட்ட நிதியை நாளொன்றுக்கு 336 ஊதியம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி M தொ ச மாவட்ட குழு உறுப்பினர் தோழர் S. ராஜூ தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வி ச மாவட்ட துனை தலைவர் தோழர் K அழகர்சாமி, விச தாலுகா செயலாளர் தோழர் S. விஜயன், விதொச மாவட்ட குழு உறுப்பினர் S. அமலிஆரோக்யசெல்வி, விதொச மாவட்ட செயலாளர் தோழர் A. பொன்னுசாமி ஆகியோர் கண்டன உரையாற்றினர். 300க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்...

# "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானது வருகின்ற நாளை செப்10 நடைபெறுகிறது மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

சிவகங்கை, செப்.09-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை, தேவகோட்டை நகராட்சி, இளையான்குடி, சிவகங்கை, கல்லல் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் குறிப்பிட்ட பகுதிகளுக்கான முகாம்கள், குறிப்பிட்ட பகுதிகளில் நடைபெறவுள்ளது - மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தகவல்.




தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.7.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற செப்டம்பர் 10 ஆம் தேதி மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 26 மற்றும் 27 ஆகிய பகுதிகளுக்கென இராமேஸ்வரம் மெயின்ரோட்டில் அமைந்துள்ள சீனியப்பா மஹாலிலும்,

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 25 மற்றும் 26 ஆகிய பகுதிகளுக்கென தண்டாயுதபானி கோவில் தெருவில் அமைந்துள்ள சக்தி மஹாலிலும், இளையான்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட விசவனூர், அளவிடங்கான், முத்தூர், பூலான்குடி, வண்டல் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென விசவனூர் ஊராட்சியில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்திலும், சிவகங்கை புறநகர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட காமராஜர் நகர், சஞ்சய் நகர், தென்னலிவயல் ஆகிய பகுதிகளுக்கென மேலூர் மெயின் ரோட்டில் அமைந்துள்ள சோலை மஹாலிலும்,

கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கல்லல், செம்பனூர், செவரக்கோட்டை ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென கல்லல் ஊராட்சியில் அமைந்துள்ள சமுதாயக் கூடத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப் படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி நிலவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.



# நல்லாசிரியர் விருது பெற்ற தலைமை ஆசிரியைக்கு ஊர் பொதுமக்கள் பாராட்டு

தென்காசி, செப்.09-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி அரியநாயகிபுரம் இந்து நாடார் உறவின்முறை மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியராக இருந்து வருபவர் முனைவர் சீனியம்மாள் ஆகும் இவர் அப்பள்ளியின் 100 சதவீத தேர்ச்சிக்கு சிறந்த முறையில் பணியாற்றி வந்தார் தமிழக அரசு சார்பில் நல்லாசிரியர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட சீனியம்மாள் அவர்களுக்கு தமிழக கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விருது வழங்கி கௌரவித்தார் டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறந்த நாளை ஒட்டி கொண்டாடப்படும் ஆசிரியர் தின விழாவில் விருது பெற்ற தலைமை ஆசிரியை சீனியம்மாள் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மற்றும் ஆசிரிய பெருமக்கள் அரியநாயகிபுரம் கிராம ஊராட்சி தலைவர் மற்றும் உறுப்பினர்கள் சமூக ஆர்வலர்கள் உறவினர்கள் பள்ளி மாணவ மாணவிகள் மேலாண்மை குழு உறுப்பினர்கள் சக ஆசிரிய ஆசிரியைகள் ஆகியோர் நேரிலும் அலைபேசியிலும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

## இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்

# மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

இராமநாதபுரம், செப்.09-

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் குறித்த 297 மனுக்கள் பெற்று மனுதாரரின் முன்னிலையில் மனுக்களை விசாரணை செய்து தொடர்புடைய அலுவலர்களிடம் மனுக்களை வழங்கி உரிய நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில் வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, தனிநபர் வீடு வழங்கும் திட்டம், குடிநீர் இணைப்பு வழங்குதல் உள்ளிட்டவை தொடர்பாக பொதுமக்கள் மனுக்களை அளித்தனர். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், ஒவ்வொரு வாரமும் பொதுமக்களிடம் பெறக்கூடிய மனுக்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு ஒருமாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு உரிய தீர்வு வழங்கிட வேண்டும் எனவும், தீர்வு வழங்க முடியாத மனுக்கள் நிலை குறித்து மனுதாரர்களிடம் அலுவலர்கள் எடுத்துரைக்க வேண்டும் எனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும் பொதுமக்கள் வழங்கும் மனுக்களுக்கு துறைசார்ந்த அலுவலர்கள் சிறப்பு கவனம் எடுத்து செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.கோவிந்தராஜலு அவர்கள், மாவட்ட சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி. கிருஷ்ணகுமாரி அவர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.மணிமாறன் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ சர்வதேச சுற்றுலாத்தலமான கன்னியாகுமரி கடல் நடுவே நிறுவப்பட்ட கண்ணாடி கூண்டு பாலத்தில்கண்ணாடி விரிசல் விழுந்து சேதம், ஆபத்தை உணராமல் சுற்றுலா பயணிகளை அனுமதிக்கும் மாவட்ட நிர்வாகம்உடனடியாக வல்லுநர் குழு ஆய்வு செய்ய கோரிக்கை எழுந்துள்ள நிலையில் இதுகுறித்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகிறது.



■ தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது பெற்ற வேலூர் மாவட்டத்தை சார்ந்த தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் வே.இரா.சுப்புலெட்மி, நேற்று ஹோலிகிராஸ் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வின்போது மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தயாளன், மாவட்ட கல்வி அலுவலர்கள் செந்தில்குமார் (இடைநிலை), ரமேஷ் (தனியார் பள்ளிகள்) ஆகியோர் உடனிருந்தனர்.



# வேலூர், காட்பாடி அதிமுக அலுவலகத்தில் மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம்

வேலூர், செப்.09-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, விருதம்பட்டு, எஸ்.ஆர்..கே டிரேடர்ஸ், அதிமுக அலுவலகத்தில், வேலூர் பிரசிடென்சி ரோட்டரி சங்கம், சென்னை டாக்டர் அகர்வால் கண் ஆராய்ச்சி மையம், குறிஞ்சி இன்டர்நேஷனல் டிரஸ்ட் கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் சார்பில் மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் வேலூர் பிரசிடென்சி ரோட்டரி சங்கம் தலைவர் ரமேஷ், செயலாளர் நரேந்திரபாபு, பொருளாளர் கார்த்திகேயன் ஆகியோர் தலைமையிலும், சமுதாயப் பணி மருத்துவம் இயக்குனர் வச்சலாஸ்ரீ, சங்க பணி இயக்குனர் ராஜசேகர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக அதிமுக மாநகர மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.கே அப்பு கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மருத்துவ முகாமை துவக்கி வைத்தனர். இந்த முகாமில் வேலூர் பிரசிடென்சி சங்கம் நிர்வாகிகள் உறுப்பினர்கள், சென்னை டாக்டர் அகர்வால் கண் ஆராய்ச்சி மையம் மருத்துவர்கள் செவிலியர்கள், குறிஞ்சி இன்டர்நேஷனல் டிரஸ்ட் கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம் நிர்வாகிகள் உறுப்பினர்கள், அதிமுக நிர்வாகிகள் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பயனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




## கீர்த்தி சுரேஷின் அடுத்தப் படத்தின் பணிகள் தொடக்கம்

நடிகை கீர்த்தி சுரேஷ் இயக்குநர் மிஷ்கின் இணையும் படத்தின் படப்பிடிப்பு படப்பூஜையுடன் தொடங்கப்பட்டுள்ளது.

ஜீ ஸ்டுடியோஸ் மற்றும் ட்ரம்ஸ்டிக் புரொடக்ஷன்ஸ் நிறுவனம் இணைந்து தயாரிக்கும் படத்தின் படப்பிடிப்பு படப்பூஜையுடன் தொடங்கப்பட்டுள்ளது. இதனை அறிமுக இயக்குநர் பிரவீன் எஸ்.விஜய் இயக்கவுள்ளார். இதில் கீர்த்தி சுரேஷ் மற்றும் மிஷ்கின் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். இதன் படப்பூஜையுடன் படப்பிடிப்பு தொடங்கப்பட்டுள்ளது.

கோர்ட் ரூம் டிராமாவாக இப்படம் உருவாக இருக்கிறது. இதில் சாருகேஷ், பாலசரவணன், பாலாஜி சக்திவேல், ஆர்.சுந்தர்ராஜன், மாலா பார்வதி, தீபா உள்ளிட்ட பலர் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். இதன் படப்பிடிப்பு சென்னை மற்றும் கோயம்புத்தூரில் ஒரே கட்டமாக நடத்தி முடிக்க திட்டமிட்டு இருக்கிறது படக்குழு.

இதன் ஒளிப்பதிவாளராக அருள் வின்சென்ட், இசையமைப்பாளராக சாம் சி.எஸ், எடிட்டராக பிரசன்னா ஜி.கே உள்ளிட்டோர் பணிபுரிய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். இதன் அறிமுக போஸ்டருக்கு இணையத்தில் நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது.




## அக்டோபரில் 'அவதார் 2' மறுவெளியீடு

'அவதார்: ஃபயர் அன்ட் ஆஷ்' என்ற படத்துக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ட்வென்டியத் செஞ்சுரி ஸ்டுடியோஸ், வரும் அக்டோபர் 2ம் தேதி 'அவதார்: தி வே ஆஃப் வாட்டர்' என்ற படத்தை மறுவெளியீடு செய்கிறது. ஜேம்ஸ் கேமரூன் இயக்கியுள்ளார். கடந்த 2022ல் டிசம்பர் மாதம் வெளியான இப்படம், இந்தியாவில் அதிக வசூல் செய்த ஹாலிவுட் படம் என்ற சாதனையை படைத்தது. சிறந்த விஷூவல் எபெக்ட்சுக்காக ஆஸ்கர் விருது வென்றது. சாம் வொர்திங்டன், ஜோ சல்டானா, சிகோர்னி வீவர், கேட் வின்ஸ்லெட், ஸ்டீபன் லாங் நடித்திருந்தனர்.

## காந்தி கண்ணாடி சினிமா விமர்சனம்:






வெட்டிங் பிளானர் கேபிஒய் பாலாவிடம், தனது 60வது திருமண விழாவை விமரிசையாக நடத்தி தர கேட்கிறார் செக்யூரிட்டி பாலாஜி சக்திவேல். பல லட்ச ரூபாய் பட்ஜெட் போடும் கேபிஒய் பாலா, அதை கட்ட முடியுமா என்று கிண்டலடிக்கிறார். பாலாஜி சக்திவேல், 80 லட்ச ரூபாய் பணம் திரட்டுகிறார். அப்போது பண மதிப்பிழப்பு சட்டம் அமலாகிறது. இதனால் பணத்தை மாற்ற முடியாமல் தவிக்கும் பாலாஜி சக்திவேல், மனைவி அர்ச்சனாவின் கனவை நிறைவேற்றினாரா? அதற்கு கேபிஒய் பாலா உதவினாரா என்பது மீதி கதை.

எத்தனை வயதானாலும் காதல் மாறாது என்பதை அழுத்தமாக சொல்லியிருக்கிறார், இயக்குனர் ஷெரீஃப். இவரா காமெடி நடிகர் என்று ஆச்சரியப்பட வைக்கிறார், கதையின் நாயகனாக அறிமுகமாகியுள்ள கேபிஒய் பாலா. அவரது யதார்த்தமான நடிப்புக்கு பாஸ் மார்க் போடலாம். காதலியாக வரும் நமீதா கிருஷ்ணமூர்த்தி, நச். கதையின் தூண்கள் என்றால், காந்தியாகவே வாழும் பாலாஜி சக்திவேலும், கண்ணம்மாவாகவே மாறிய அர்ச்சனாவும்தான்.

நிகிலா சங்கர், அமுதவாணன், சரத் ரவி, ஜீவா சுப்பிரமணியன், ஆராத்யா, ரிதுசாரா, மனோஜ் பிரபு, மதன், முருகானந்தம் ஆகியோரும் கவனத்தை ஈர்த்துள்ளனர். பாலாஜி கே.ராஜாவின் ஒளிப்பதிவு இயல்பாக இருக்கிறது. விவேக், மெர்வின் இசையில் பாடல்கள், பின்னணி இசை அழுத்தம். 60 வயது காதலை நேர்த்தியாக சொன்ன இயக்குனர் ஷெரீஃப், முற்பகுதியில் அதிக கவனம் செலுத்தியிருக்க வேண்டும். ஜமீன் பாலாஜி சக்திவேலுக்கு பணத்தின் மதிப்பு தெரியாதது போன்ற காட்சிகள் நெருடுகிறது.



## கவர்ச்சியில் எல்லை மீறிய சைத்ரா

கடந்த 2019ல் வெளியான 'மஹிரா' என்ற கன்னட படத்தில் அறிமுகமானவர், சைத்ரா ஜே.ஆச்சர். கன்னடத்தில் சொந்தக்குரலிலும் பாடியிருக்கிறார். தொடர்ந்து சில படங்களில் நடித்தார். கணேஷ் இயக்கத்தில் சரத்குமார், தேவயானி, சித்தார்த், மீதா ரகுநாத் நடிப்பில் வெளியான '3 பிஹெச்கே' என்ற படத்தின் மூலம் தமிழுக்கு வந்தார். இதில் குடும்பப்பாங்காக நடித்த அவர், தனது கேரக்டரின் மூலம் தமிழ் ரசிகர்களை கவர்ந்தார். பெங்களூருவை சேர்ந்த அவர், தற்போது கன்னடத்தில் அதிக கவனம் செலுத்துகிறார். '3 பிஹெச்கே' படம் வெற்றிபெற்றாலும், தமிழில் அவருக்கு புதுப்பட வாய்ப்பு கிடைக்கவில்லை.

எனவே, வாய்ப்பு வேட்டை நடத்துவதற்காக நாள்தோறும் கவர்ச்சி போட்டோக்களை சோஷியல் மீடியாவில் வெளியிட்டு வருகிறார். சமீபத்தில் அவர் நீச்சல் உடையணிந்து கிளாமராக போஸ் கொடுத்த போட்டோக்களை பதிவிட்டுள்ளார். அதை பார்த்த நெட்டிசன்கள், பட வாய்ப்புக்காக கவர்ச்சியில் அவர் எல்லை மீறிவிட்டதாக கமென்ட் வெளியிட்டுள்ளனர்.




## 'அணிக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்தது விரக்தி அளித்தது' ஓய்வை அறிவித்த அமித் மிஸ்ரா வெளிப்படை

இந்திய கிரிக்கெட் அணியின் அனுபவ சுழற்பந்து வீச்சாளரான அமித் மிஸ்ரா, அனைத்து வடிவிலான கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இந்நிலையில், அணியில் தனக்கான வாய்ப்பு குறித்து அவர் மனம் திறந்துள்ளார்.


42 வயதான அவர், இந்திய அணிக்காக கடைசியாக கடந்த 2017ல் விளையாடி இருந்தார். கடந்த 2024 வரை ஐபிஎல் கிரிக்கெட்டில் விளையாடி இருந்தார். இந்திய அணிக்காக 22 டெஸ்ட், 36 ஒருநாள் மற்றும் 10 டி20 போட்டிகளில் விளையாடி உள்ளார். ஐபிஎல் கிரிக்கெட்டில் மூன்று முறை ஹாட்ரிக் விக்கெட்டுகளை கைப்பற்றிய பந்து வீச்சாளராக அறியப்படுகிறார்.

"எனது முதல் நேசம், எனது ஆசான், எனது மகிழ்ச்சியின் ஆதாரமாக திகழ்ந்த கிரிக்கெட் விளையாட்டில் இருந்து நான் ஓய்வு பெறுகிறேன். 25 ஆண்டுகளான நிலையில் இதை இப்போது அறிவிக்கிறேன்.

இந்த பயணத்தின் ஒவ்வொரு அத்தியாயமும் சிறந்த அனுபவத்தை தந்தது. அது என்னை கிரிக்கெட் வீரராகவும், மனிதராகவும் கட்டமைத்தது. ஆரம்பகால போராட்டத்தை கடந்த பிறகு மறக்க முடியாத தருணங்களை களத்தில் நான் பெற்றுள்ளேன். இப்போது எனது நெஞ்சமெல்லாம் நன்றியுணர்வும், அன்பும் நிறைந்துள்ளது. எனக்கு அனைத்தையும் கொடுத்தது கிரிக்கெட். இப்போது அதற்கு நான் கற்றதையும் பெற்றதையும் திரும்ப தர ஆவலுடன் உள்ளேன்.

சில நேரங்களில் அணியில் இடம்பெற்று இருப்பேன், சில நேரங்களில் இடம்பெறாமல் இருப்பேன். சில நேரங்களில் ஆடும் லெவனில் வாய்ப்பு கிடைக்கும், சில நேரங்களில் அந்த வாய்ப்பு இருக்காது. இப்படி அணிக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்தது நிச்சயம் ஒரு வீரராக எனக்கு விரக்தி அளித்தது. அதில் சந்தேகம் இல்லை. சில வீரர்கள் கேப்டனின் பேவரைட்டாக இருக்கலாம். ஆனால், அது ஒரு விஷயம் அல்ல. வாய்ப்பு கிடைக்கும் போது உங்கள் திறனை நீங்கள் நிரூபிக்க வேண்டும்" என அமித் மிஸ்ரா கூறியுள்ளார்.

## 40 சதவீதம் ஜிஎஸ்டி காரணமாக ஐபிஎல் கிரிக்கெட் போட்டி டிக்கெட் விலை அதிகரிக்கும்




மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் டெல்லியில் நேற்று முன்தினம் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் நடைபெற்றது. இதில் ஜிஎஸ்டியை எளிமைப்படுத்தும் வகையில் 12, 28 ஆகிய சதவீதங்களை நீக்கிவிட்டு 5, 18 ஆகிய இரு சதவீத நடைமுறையைப் பின்பற்ற முடிவு செய்யப்பட்டது.

அதேவேளையில் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளுக்கான டிக்கெட் மற்றும் கேசினோ, ரேஸ் கிளப்புகளுக்கு உள்ளீட்டு வரியுடன் (ஐடிசி) 40 சதவீத ஜிஎஸ்டி இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் இவற்றுக்கு 28 சதவீத ஜிஎஸ்டி இருந்தது.

கடந்த சீசனில் சில நகரங்களில் ஐபிஎல் டிக்கெட்டின் அடிப்படை விலை ரூ.500 ஆக இருந்த நிலையில் 28 சதவீத ஜிஎஸ்டியின் காரணமாக ரூ.640 செலுத்த வேண்டி இருந்தது. தற்போது இது 40 சதவீதமாக மாற்றப்பட்டுள்ளதால் இனிமேல் ரூ.700 செலுத்த வேண்டி வரும். ஏனெனில் ஐபிஎல் டிக்கெட்டுகள் 'ஆடம்பரப் பொருட்கள்' பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளையில் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டு போட்டிகளுக்கான டிக்கெட் விலை ரூ.500க்கு கீழ் இருந்தால் அவற்றுக்கு ஜிஎஸ்டியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதேவேளையில் டிக்கெட்டின் விலை ரூ.500க்கு மேல் இருந்தால் 18 சதவீத ஜிஎஸ்டி இருக்கும்.

## ஐபிஎல் ஆடாமல் சிவப்பு பந்து கிரிக்கெட்டுக்கு அர்ப்பணித்த அதிசயப் பிறவி ஷுபம் சர்மா



மத்தியப் பிரதேச ரஞ்சி அணியின் கேப்டன் ஷுபம் சர்மா. இவர் உண்மையில் இந்த ஐபிஎல்டி20 பணமழை காலக்கட்டத்தின் அதிசயப் பிறவியாக உள்நாட்டு சிவப்புப் பந்து கிரிக்கெட்டிற்கென்றே தன் கிரிக்கெட் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்டவர் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதா? ஆம்! அதிசயம் ஆனால் உண்மை!

32 வயதை நெருங்கும் ஷுபம் ஷியாம்சுந்தர் சர்மா என்னும் இந்த அதிசய வீரர் மத்தியப் பிரதேச வெள்ளைப்பந்து கிரிக்கெட் போட்டிகளில் ரெகுலராக ஆடாதவர். 67 முதல் தரப் போட்டிகளில் இதுவரை 4,301 ரன்களை 43.44 என்ற சராசரியில் 12 சதங்கள் 23 அரைசதங்களுடன் எடுத்துள்ளார். அதிகபட்ச ஸ்கோர் 240. 44 லிஸ்ட் ஏ போட்டிகளில் 1477 ரன்களை எடுத்துள்ளார். அதிகபட்ச தனிப்பட்ட ஸ்கோர் 108. 2 சதம், 11 அரைசதம். வெறும் 17 டி20 போட்டிகளில் மட்டுமே ஆடி 290 ரன்களை எடுத்துள்ளார்.

தன் வலது கை ஆஃப் பிரேக் பவுலிங் மூலம் சிவப்புப் பந்தில் 28 விக்கெட்டுகளை அதுவும் ஒருமுறை 5/59 என்றும் அசத்தி எடுத்துள்ளார். லிஸ்ட் ஏவிலும் 23 விக்கெட்டுகளை எடுத்த ஷுபம் சர்மா அதில் ஒரு முறை 4/21 என்று அசத்தியுள்ளார். இவர் கடைசியாக டி20 விளையாடியது 2023ம் ஆண்டு. இவர் ஆட்டத்தைப் பார்த்த வர்ணனையாளர்கள் சிலர் இவரது ஆட்ட முறையை வாசிம் ஜாஃபருடன் ஒப்பிடுகின்றனர்.

12 ஆண்டுகளாக மத்தியப் பிரதேச அணிக்கு ஆடி வருகிறார். ரஞ்சி டிராபி போட்டிகளுக்கு ஷுபம் சர்மா கேப்டனாகி 2 ஆண்டுகள் ஆகின்றன. ஆனாலும் இவருக்கு இந்தியா யு19 அணியில் வாய்ப்புக் கிடைக்கவில்லை என்பது துரதிர்ஷ்டமே. ஒருமுறை 2012ல் யு19 உலகக்கோப்பை உத்தேச அணியில் தேர்வானார். இறுதி அணியில் தேர்வு செய்யப்படவில்லை. அந்த உலகக்கோப்பையை இந்திய யு19 அணி உன்முக்த் சந்த் தலைமையில் வென்றது. உன்முக்த் சந்த் இப்போது அமெரிக்காவில் இருக்கிறார்.

12 ஆண்டுகாலம் உள்நாட்டுக் கிரிக்கெட்டில் உழன்று வரும் ஷுபம் சர்மா இந்தியா ஏ அணியில் கூட இடம்பெற்றதில்லை. இவரது சகாக்களான ரஜத் படிதார், குல்தீப் சென், வெங்கடேஷ் அய்யர், ஆவேஷ் கான் போன்றோர் இந்திய அணித் தொப்பியை அணிந்து ஆடினர். ஆனால் தனக்கு உள்நாட்டுக் கிரிக்கெட்டில் சாதிப்பதே பிடித்திருக்கிறது என்கிறார் இந்த அதிசயப்பிறவி.

ஈஎஸ்பிஎன் கிரிக் இன்போ இணையத்திற்கு அவர் இது தொடர்பாகக் கூறும்போது, "இத்தனை நீண்ட காலம் ஆடியது பெரிய மகிழ்ச்சியாக உள்ளது. உள்நாட்டுக் கிரிக்கெட்டில் இன்னும் சாதிக்கவே விரும்புகிறேன்" என்றார்.

202122 உள்நாட்டுத் தொடரிலிருந்தே பிரமாதமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் ஷுபம் சர்மா, வெளியுலக வெளிச்சத்திற்கு வரவேயில்லை. அனைத்து டாப் உள்நாட்டுத்தொடர்களிலும் சேர்த்து அந்த சீசனில் 2849 ரன்களைக் குவித்தார். இதே காலக்கட்டத்தில் இவர் எடுத்த 9 சதங்கள் 52.75 சராசரி இவரது பேட்டிங் தன்மையை நமக்கு உணர்த்தும். சமீபத்தில் நடைபெற்று வரும் துலீப் கோப்பை வடகிழக்கு மண்டல அணிக்கு எதிராக 2வது இன்னிங்சில் 122 ரன்களை 215 பந்துகளில் எடுத்துள்ளார்.

202122ல் மத்தியப் பிரதேசம் தன் ரஞ்சி கோப்பை வெற்றிப்பாதையில் சென்ற போது ஷுபம் சர்மா 6 போட்டிகளில் 608 ரன்களை எடுத்தார். மும்பைக்கு எதிராக இறுதிப் போட்டியில் எடுத்த சதம் உட்பட 4 சதங்கள் இதில் அடங்கும்.

இவர் யார் கைவண்ணத்தில் வளர்ந்தார் என்பதுதான் மிக முக்கியம். வேறு யார்? லெஜண்ட் ராகுல் திராவிட் தான். "தேசிய கிரிக்கெட் அகாடமியில் ராகுல் திராவிட் சார் யு16 செஷன் ஒன்றை எங்களுக்காக எடுத்தார். அப்போது அவரிடம் நிறைய சந்தேகங்களைக் கேட்டேன், அவர் அப்போது கூறிய டிப்ஸ்கள் இப்போதும் எனக்கு உதவிகரமாக உள்ளன. போட்டிகளுக்கு எப்படி தயார் செய்து கொள்வது என்பதை சொல்லிக் கொடுத்தார். அவையெல்லாம் பொக்கிஷங்கள்." என்கிறார்.

டி20 கிரிக்கெட்டின் பணமழை மற்றும் பெயர், புகழ்ச்சி என்று இளம் வீரர்கள் ஓடும் காலக்கட்டத்தில் உள்நாட்டுக் கிரிக்கெட்டே போதும் அதுவும் சிவப்புப் பந்து கிரிக்கெட்டே போதும் என்று கூறும் அதிசயப்பிறவி இனி உருவாவது கடினம்தான்.



■ இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.கோவிந்தராஜலு அவர்கள் உள்ளார்.



## தமிழ்நாடு அரசின் நான்காண்டு சாதனைகள் குறித்த நாடுபோற்றும் நான்காண்டு சாதனை மலர் கையேடு வெளியிடும் விழா

இராமநாதபுரம், செப்.09-

தமிழ்நாடு அரசின் நான்காண்டு சாதனைகள் குறித்த நாடுபோற்றும் நான்காண்டு சாதனை மலர் கையேடு வெளியிடும் விழா செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் இராமநாதபுரம் மாவட்டம், தொண்டியில் நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில், மாண்புமிகு வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் மற்றும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு த்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் ஆகியோர் சாதனை மலர் கையேட்டினை வெளியிட்டார்கள்.

இவ்விழாவில் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.நவாஸ்கனி அவர்கள், இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.காதர் பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள், திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் திரு.இராம.கருமாணிக்கம் அவர்கள், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.செ.முருகேசன் அவர்கள் பங்கேற்று நான்காண்டு சாதனை மலர் கையேட்டினை பெற்றுக்கொண்டனர்.

இந்த நான்காண்டு சாதனை மலர் கையேட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் அனைத்து த்துறைகள் மூலம் நான்காண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அரசின் திட்டங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திவ்யான்ஷீநிகம்,இ.ஆ.ப., அவர்கள், தொண்டி பேரூராட்சி தலைவர் திருமதி.ஷாஜகான் பானு அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லெ.பாண்டி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## குடியாத்தத்தில் தாழை சிலம்பம் பயிற்சி மற்றும் சுப்பிரமணி சிலம்பம் கலைக்குழு மாணவர்கள் உலக சாதனை படைத்துள்ளனர்

### பயிற்சி ஆசிரியர் எஸ்.சிவகுமார் மற்றும் பொதுமக்கள் பாராட்டு

வேலூர், செப்.09-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, குடியாத்தம் அடுத்த தாழை சிலம்பம் பயிற்சி பள்ளி மற்றும் சுப்பிரமணி சிலம்பம் கலைக்குழு பயிற்சி பள்ளி மாணவ மாணவிகள், திருக்குறளை வாய்விட்டு சொல்லிக்கொண்டு சிலம்பம் சுற்றி, மாபெரும் உலக சாதனை படைத்துள்ளனர். தாழை சிலம்பம் பள்ளி மற்றும் சுப்பிரமணிய சிலம்பம் கலைக்குழு மாஸ்டர் எஸ்.சிவகுமார் தலைமையில் இந்த பயிற்சி வகுப்புகள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. இதில் 17 மாணவர்கள் உலக சாதனை புத்தகத்தில் இடம் பெற்று, உலக சாதனை படைத்துள்ளனர். இதுகுறித்து பொதுமக்கள், மாணவ மாணவிகள் பயிலும் பள்ளிகளின் ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலர் பாராட்டி வருகின்றனர்.

## உலக சுற்றுலா தின விழா 2025ஐ முன்னிட்டு, சுற்றுலா தொழில் முனைவோர்கள் தமிழக அரசின் சுற்றுலா விருதுகளுக்கு வருகின்ற 15.9.2025ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, தகவல்

சிவகங்கை, செப்.09-

தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் சார்பில், உலக சுற்றுலா தின விழா 2025ஐ முன்னிட்டு, அதன் ஒரு பகுதியாக தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா தொழில் முனைவோர்களுக்கு விருதுகள் வழங்கி ஊக்கப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சுற்றுலா தொழில் முனைவோர்களில் வெற்றியாளர்கள், பயண ஏற்பாட்டாளர்கள் மற்றும் புதிய உத்திகளை கையாளுபவர்களுக்கு சுற்றுலா விருதுகள் கடந்த 2022 ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், இவ்வாண்டும் தமிழ்நாட்டிற்கான சிறந்த சுற்றுலா ஏற்பாட்டாளர்கள், சிறந்த செட்டிநாடு உணவகங்கள், சிறந்த செட்டிநாடு பாரம்பரிய தங்கும் விடுதிகள், சுற்றுலா தொடர்பான கல்வி நிறுவனங்கள், சுற்றுலா வழிகாட்டிகள், மாநாடு மற்றும் கண்காட்சி அமைப்பாளர்கள், சிறந்த சமூக ஊடக செல்வாக்கு செலுத்துபவர், தூய்மையான சுற்றுலாத் தலம் உள்ளிட்ட 17 வகையான சுற்றுலா விருதுகள் வழங்கப்படவுள்ளது.

எனவே தகுதியும், விருப்பமும் உள்ள அனைத்து சுற்றுலா தொழில் முனைவோர்களும் தமிழக அரசின் சுற்றுலா விருதிற்கு WWW.tntourismawards.com என்ற இணையதளத்தின் வாயிலாக வருகின்ற 15.9.2025ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்.

கூடுதல் விவரங்களுக்கு சுற்றுலா அலுவலர், காரைக்குடி அவர்களை 8939896400, 9994217107 என்ற அலைபேசி எண்களிலோ அல்லது touristofficekaraikudi@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியின் வாயிலாகவோ தொடர்பு கொண்டு, விபரங்கள் பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரியிலுள்ள மருத்துவம் சார்ந்த சான்றிதழ் படிப்புகளை பயில்வதற்கு,

## தகுதியான நபர்கள் வருகின்ற 12.9.2025 ஆம் தேதிக்குள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை குறிப்பிட்டுள்ள முகவரியில் சமர்ப்பித்திடல் வேண்டும்

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

2025-2026 ஆம் கல்வியாண்டிற்கான சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரியிலுள்ள மருத்துவம் சார்ந்த சான்றிதழ் பாடப்பிரிவுகளில், மாவட்ட அளவிலான சேர்க்கை மற்றும் முன் விண்ணப்பமில்லா நேரடி சேர்க்கை ஆகியவைகளுக்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது.

Anesthesia Technician, Theatre Technician ஆகிய பாடப்பிரிவுகளில் சான்றிதழ் படிப்புகள் வழங்கப்படவுள்ளது. சிவகங்கை மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரியில் Anesthesia Technician, Theatre Technician ஆகிய சான்றிதழ் படிப்புகளுக்கு மொத்தம் 37 இடங்கள் காலியாகவுள்ளன. இதில், Anesthesia Technician பாடப்பிரிவின் கீழ் 18 காலியிடங்களும், Theatre Technician பாடப்பிரிவின் கீழ் 19 காலியிடங்களும் உள்ளன. மேலும், காலியிடங்கள் தொடர்பான விவரங்களுக்கு www.gsmch.ac.in வலைதளத்தின் வாயிலாகவோ அல்லது சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரியின் அறிவிப்புப் பலகையினை பார்த்தும் அறிந்து கொள்ளலாம்.

இச்சான்றிதழ் படிப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்கு, விண்ணப்பதாரர் 31.12.2025 அன்று 17 வயது பூர்த்தி அடைந்தவராகவும், தெரிவுக்/தேர்வுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டவாறாகவும் பத்தாம் வகுப்பு / மேல்நிலைப் பள்ளிப் படிப்பில் தேர்ச்சி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். மேலும், சேர்க்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கான 5% இடஒதுக்கீடு உள்ளிட்ட தமிழ்நாடு அரசின் இடஒதுக்கீட்டு நடைமுறை பின்பற்றப்படும்.

மேலும், இச்சான்றிதழ் படிப்புகளுக்கான விண்ணப்பப் படிவங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலக உதவி மையத்திலோ அல்லது சிவகங்கை மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் அவர்களின் அலுவலகத்திலோ கட்டணமின்றி பெற்றுக்கொள்ளலாம். உரிய ஆவணங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை வருகின்ற 8.9.2025 ஆம் தேதி முதல் 12.9.2025 ஆம் தேதிக்குள் சிவகங்கை மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் அவர்களின் அலுவலகத்தில் சமர்ப்பித்திடல் வேண்டும்.

அவ்வாறாக, பெறப்படும் விண்ணப்பங்களில் தகுதியான நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, வருகின்ற 16.9.2025 அன்று தகுதிப் பட்டியல் வெளியிடப்படும். 20.09.2025 தேதி மாணாக்கர்கள் பாடப்பிரிவில் சேர்ந்திடல் வேண்டும். மேலும், நேரடி மாணவர் சேர்க்கையானது (மீதமுள்ள மாணவர் சேர்க்கை இடங்களுக்காக) 22.9.2025 ஆம் தேதியிலிருந்தும், முழு மாணவர் சேர்க்கை செயல்முறையானது 30.09.2025 அன்றும் நிறைவுப்பெறும். பாட வகுப்புகளானது வருகின்ற 06.10.2025 முதல் தொடங்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இச்சான்றிதழ் படிப்பு சேர்க்கைக்கான கலந்தாய்வானது சிவகங்கை மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரியில் நடைபெறும். மேலும், இக்கலந்தாய்வின் போது, மேனிலைப்பள்ளி மற்றும் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், மாற்று சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் (பொருந்து மாயின்), சாதிச் சான்றிதழ், வயதுச் சான்று (பிறப்புச் சான்றிதழ் / பள்ளிச் சான்றிதழ்),மாவட்ட மருத்துவ வாரியத்திடமிருந்து பெறப்பட்ட மாற்றுத்திறனாளி சான்றிதழ் (பொருந்துமாயின்), ஆதார் அட்டை அல்லது புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை ஆகிய அசல் ஆவணங்களை சமர்ப்பித்திடல் வேண்டும்.

மேலும், தெரிவு செய்யும் நடைமுறை பரிந்துரைக்கப்பட்ட விதிகளின்படி முற்றிலும் தகுதி மற்றும் வகுப்புவாரி இடஒதுக்கீட்டின் அடிப்படையில் அமையும். கலந்தாய்வின் போது ஒதுக்கீடு ஆணைகள் அந்த இடத்திலேயே வழங்கப்படும். அதுமட்டுமன்றி, குறிப்பிட்டுள்ள பாடப்பிரிவுகளில் சேர்க்கப்பட்ட மாணவர்கள், பொருந்தக்கூடிய விதிகளுக்குட்பட்டு, ”வெற்றி நிச்சயம்” திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

எனவே, தகுதியுள்ள மாணாக்கர்கள் சுகாதாரத் துறையின் சார்பில் வழங்கப்படும், திறன் அடிப்படையிலான சான்றிதழ் பாடப்பிரிவுகளில் பயில்வதற்கு இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.





■ பிரிட்டன் ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கச் சென்று 15516 கோடி முதலீடுகளை ஈர்த்து தாயகம் திரும்பினார் கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சி வடக்கு மாவட்ட திமுக சார்பில் காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்கள் தலைமையில் பிரம்மாண்ட வரவேற்பு பம்மல் தெற்கு பகுதி செயலாளர் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழு தலைவர் வே.கருணாநிதி அவர்கள் தலைமையில் 500க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு வரவேற்பு அளித்தனர் இதில் மாமன்ற உறுப்பினர்கள் பகுதி கழகச் செயலாளர் சார்பு அணி நிர்வாகிகள் உட்பட அனைவரும் கலந்து கொண்டனர்



## பட்டா வழங்க கோரி தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம்

தாம்பரம், செப்.09-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த பெருங்களத்தூர் என்.ஜி.ஓ காலனியில் உள்ள வீட்டு மனைகள் 286 பேருக்கு பட்டா ஒதுக்கீடு செய்யபட்டு உங்களுடன் முதல்வன் முகாமில் 234 பேருக்கு மட்டும் பட்டா வழங்கபட்டுள்ளது. இதனால் மீதமுள்ள 52 பேருக்கு பட்டா வழங்க வலியுறுத்தி அப்பகுதியினர் பலமுறை வட்டாட்சியரிடமும் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினரிடமும் கோரிக்கை வைத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கபடாததால் , பாதிக்கபட்ட அனைவரும் தாம்பரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் முற்றுகை போராட்டம் நடத்தினர். பின்னர் வட்டாட்சியரை சந்தித்து மீண்டும் மனு அளித்ததோடு இம்முறை பட்டா வழங்கா விட்டால் உண்ணாவிரத போராட்டம் நடத்தபோவதாக தெரிவித்தனர்



■ மதுரை மாவட்டம் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ஒவ்வொரு ஒன்றியங்களிலும் ஒருங்கிணைந்த சேவை மையம் செயல்படுத்தப்பட இருக்கிறது, ஒவ்வொரு ஒன்றிய மையங்களிலும் 10 முன்களப் பணியாளர்களுக்கு மேற்கண்ட கணக்கெடுப்பு மற்றும் மறுவாழ்வு பணிகளை மேற்கொள்வதற்காக மதுரை மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாளில் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் கையடக்க கணிணிகளை வழங்கினார்.



■ மதுரை மாவட்டத்தில் டாக்டர்.எம்.ஜி.ஆர். விளையாட்டு அரங்கம் வளாகத்தில் வரும் 28-11-2025 முதல் 10-12-2025 வரை நடைபெறவுள்ள 14வது ஹாக்கி ஆடவர் ஜூனியர் உலகப்கோப்பை நடைபெற உள்ளதை முன்னிட்டு மைதானத்தில் முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் செய்து பார்வையிட்டார்.



■ வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, வள்ளலார், ஹோலிகிராஸ் பள்ளியில் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் பட்டதாரி ஆசிரியர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு வேலூர் மாவட்டத்திற்கு பணி நியமனம் செய்யப்பட்டுள்ள 83 ஆசிரியர்களுக்கான ஆணைகளை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, கடந்த (06.09.2025) அன்று ஹோலிகிராஸ் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இந்நிகழ்வின்போது மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தயாளன், மாவட்ட கல்வி அலுவலர்கள் செந்தில்குமார் (இடைநிலை), ரமேஷ் (தனியார் பள்ளிகள்) ஆகியோர் கலந்துகொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,
Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161